தேவையைப் பூர்த்தி செய்கின்ற விதத்திலே உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 354, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

354—

கொப்பரைத் தேங்காய் கொள்முதல்

*****17219**—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இராமநாதபுரம் மாவட்டத்தில் குறைந்த அளவான 8,363 ஹெக்டேரில் மட்டுமே தென்னை பயிரிடப்பட்டுள்ளது. 636 இலட்சம் தேங்காய்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாலும், இதுவரை கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையம் அங்கே தொடங்கப்படவில்லை. இருப்பினும், கொப்பரை வரத்தின் அடிப்படையில், தேவை ஏற்படும்பட்சத்தில் முறையான கருத்துரு மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பெறப்பட்டு, TANFED *நிறுவனம்மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையம் தொடங்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1960-களிலே மத்திய, மாநில அரசுகள்*

2013 ஏப்ரல் 30]

எண்ணெய்வித்துகளை ஊக்குவிப்பதற்காக முதன்முதலாக இராமநாதபுரம் மாவட்டத்திலே, தென்னை விவசாயம் தொடங்கப்பட்டது. கீழக்கரை, காஞ்சிரங்குடி, ரெகுநாதபுரம், தாமரைக்குளம், பெரியபட்டணம் உட்பட எனக்குத் தெரிந்து, என்னுடைய ஆய்விலே 10,000 ஹெக்டேரில் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. 2 இலட்சம் மக்கள் அதை நம்பி வாழ்கிறார்கள். எனவே, அங்கே கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் மிகவும் அவசியமாக இருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்று சொன்னதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, தேங்காயைக் கொள்முதல் செய்வதற்கும், கொப்பரைக்கான கொள்முதல் விலையை 70 ரூபாயாக உயர்த்துவதற்கும் இந்த அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக வினவ விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் மத்திய அரசு வேளாண் செலவு மற்றும் விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கொப்பரைக் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை அறிவித்து வருகிறது. நடப்பு 2013-2014 நிதியாண்டில், அரைவை கொப்பரை விலை கிலோ 52 ரூபாய் 50 பைசா எனவும், பந்து கொப்பரை கிலோ ஒன்றுக்கு 55 ரூபாய் எனவும் குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. மத்திய அரசு தேசிய அளவில் கொப்பரைக் கொள்முதலுக்கு தேசிய வேளாண் விற்பனை இணையத்தினை மையக் கொள்முதல் முகவராக நியமித்துள்ளது. NAFED நிறுவனம் தமிழ்நாட்டில் அரைவைக் கொப்பரைக் கொள்முதல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலமாக முகவராக இருந்து கொள்முதல் செய்து வருகிறது. ஏனென்றால், கொப்பரைக்கான விலையை நிர்ணயம் செய்வது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. எனவே, தற்போது கொப்பரையை கிலோ ஒன்றுக்கு 52 ரூபாய் 50 காசுகள் எனவும், பந்து கொப்பரை கிலோ ஒன்றுக்கு 55 ரூபாய் எனவும் நாங்கள்

கொள்முதல் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 355, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

355—

பகுதிநேர நியாய விலைக் கடை

***14387—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, வெள்ளிமலை மற்றும் குருவார்பட்டி மலைக் கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மேலூர் தொகுதி, பள்ளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் பொட்டப்பட்டி முழுநேரக் கடை 355 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பொட்டப்பட்டி முழுநேர நியாய விலைக் கடையில் லக்கடிப்பட்டி மற்றும் வெள்ளிமலை கிராமத்தை உள்ளடக்கிய குருவார்பட்டி ஆகிய இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே செயல்பட்டு வரும் நிலையில், அரசு விதிகளின்படி மேலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை வெள்ளிமலை கிராமத்தில் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியப் பகுதியில்*